[1993 பிப்ரவரி 12

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 65, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

65—

காட்டுமன்னார்கோயிலில் பெண்கள் கல்லூரி அமைக்கும் திட்டம்

*10585— திரு. என். ஆர். ராஜேந்திரன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டு மன்னார்கோயிலில் ஒரு பெண்கள் கல்லூரியினை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியை மையமாகக் கொண்டு ஏறத்தாழ 10 மேல்நிலைப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இங்கே கல்வி பயிலும் மாணவிகள், பெண்கள் கல்லூரியில் போய்ச் சேர வேண்டுமானால் அவர்கள் கும்பகோணத்திற்குத் தான் போய்ச்சேர வேண்டும்; அது ஏறத்தாழ 50 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அங்கே கல்வி பயிலச் செல்லும் மாணவிகளுக்கு போதிய இட வசதி தரப்படுவதில்லை. மேலும் அவர்கள் விரும்புகின்ற பாடங்கள் கொடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அங்கே இதுபோன்று அவதிப்படும் பொதுமக்களினுடைய குறைகளைப் போக்கும் பொருட்டு, அவர்கள் ஒரு நீண்ட கால கோரிக்கையாக அங்கே பெண்கள் கல்லூரி வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை நிறைவு செய்யும் பொருட்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் மீண்டும் அதை மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புதிய கல்லூரிகள் எதுவும் திறப்பதில்லை என்ற கொள்கை முடிவில் நாம் இருக்கிறோம். காட்டுமன்னார் கோவில் போன்ற இடங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கின்றன. தேவை இருக்கிறது; இருந்தாலும் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு புதியதாக கல்லூரிகள் திறப்பதில்லை என்ற முடிவை அரசு வைத்திருக்கிறது.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்த வரையில் அடுத்த ஆண்டிலாவது அரசு இதைப்பற்றிப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டில் இந்தக் கேள்வியைக் கேட்கும்படியாகச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதியில் கல்லூரி தேவையென்பதை அறிந்து, அங்கே இருக்கிற தனியார்கள் கல்லூரிகள் அமைக்க முன்வந்தால் அதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 4 கல்லூரிகள், 5 கல்லூரிகள் பக்கம் அனுமதி தரப்பட்டிருக்கிறது. சமீபத்தில் நன்கொடை வசூலிப்பதைப் பற்றி உச்சநீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் தனியார் வருகிறார்களா, வரமாட்டார்களா என்பது நமக்கு தெரியவில்லை. ஆகவே, ஓரிரு மாதங்களில் நிலைமை தெளிவாகிறபோது இந்தப் பிரச்சினையைப் பற்றி நாம் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தனியார் கல்லூரிகள் ஆரம்பிக்கும்போது அரசு சலுகைகள் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குத் தனிக் கேள்வி கேட்க வேண்டும். துணை வினா மூலவினாவை ஒட்டியதாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன சலுகைகள் என்பதைத் தனியாகக் கேட்கவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 66, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

66—.

இராமநாதபுரம் அரசு கலைக்கல்லூரியில் பட்ட மேற்படிப்பு ஆரம்பித்தல்.

*10850—டாக்டர். எஸ். சுந்தரராஜ் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் அரசு கலைக்கல்லூரியில் பட்ட மேற்படிப்பு ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர். எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். இங்கே ஒரே ஒரு அரசு கலைக் கல்லூரியும், ஒரு தனியார் கல்லூரியும் இருக்கின்றன. தனியார் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகள் இல்லை. ஆகவே கல்வியின் மூலம் பொருளாதார முன்னேற்றம் காண அயராது பாடுபடும் ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவியின் ஆட்சியில் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் முன்னேற்றம் கருதி, இந்தப் பகுதி வாழ் மக்களின் நலம் கருதி, பட்ட மேற்படிப்பைத் துவங்க மறுபரிசீலனை செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.